

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. என்.ஓ.சுகபுத்ரா, தலைமையில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று பார்வையிட்டு விவசாயிகளுக்கு விதைப்பைகளையும், உணவு மற்றும் ஊட்டச்சத்து இயக்கத்தின் கீழ் தார்பாய்களையும் மருந்து தெளிப்பான்களையும் வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் பொன்னுத்தம்பி, சந்தானப்பாண்டியன் ஆகியோர் இருந்தனர்.



விருதுநகர் மாவட்டம், குல்லூர்சந்தை ஊராட்சியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் நேரில் சென்று பார்வையிட்டு, பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் முன்னாள் சேர்மன் சுப்பாராஜ், ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷன், பொன்ராஜ் ஆகியோர் இருந்தனர்.

### 5 வழித்தடம் மாற்றம் – 4 வழித்தடம் நீட்டிப்பு !

# சேலம் மலைவழித்தடத்தில் 5 புதிய புறநகர் பேருந்துகள்!

## அமைச்சர்கள் எ.வ.வேலு – இரா.இராஜேந்திரன் தொடங்கி வைத்தனர்!

சேலம், அக். 12-

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் மலைவழித்தடங்களில் 5 புதிய புறநகர் பேருந்துகள் மற்றும் 5 நகர பேருந்துகள் வழித்தட மாற்றம் மற்றும் 4 வழித்தட நீட்டிப்பு பேருந்து சேவைகளை சேலம், புதிய பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் சேலம் கோட்டம் சார்பில் மலைவழித்தடங்களில் புதிய BS VI குறுஞ்சட்ட புறநகர் பேருந்துகள் மற்றும் நகர பேருந்துகள் வழித்தட மாற்றம் மற்றும் வழித்தட நீட்டிப்பு பேருந்து சேவைகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் ஆகியோர் நேற்று முன்தினம் (10.10.2025) சேலம், புதிய பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கி வைத்தார்கள்.

முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்கள் பயனடையும் வகையில் பழைய பேருந்துகளை மாற்றம் செய்து, அதற்கு பதிலாக புதிய வகை பேருந்துகளாக இயக்கிடவும், கிராமப்புறத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவிகள், மகளிர், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் தேவைக்கேற்ப புதிய வழித்தடங்கள் மற்றும் ஏற்கனவே இயங்கி வந்த வழித்தடங்களை நீட்டிப்பு செய்து பேருந்து சேவை கிடைத்திடவும் வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

அந்தவகையில், இன்றையதினம் மலைவழித்தடங்களில் தற்போது இயக்கப்பட்டு வரும் குறுஞ்சட்ட BS III புறநகர் பேருந்துகளுக்கு பதிலாக புதிய BS VI குறுஞ்சட்ட புறநகர் பேருந்துகள் சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ஏற்காடு, பெலாத்தூர் வழியாக செம்மநத்தம் வரையிலும், சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ஏற்காடு வழியாக பட்டிப்பாடி வேலூர் வரையிலும், சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ஏற்காடு வழியாக கொட்டச்சேடு வரையில் 2 பேருந்துகளும், சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து கொல்லிமலை வரை ஒரு பேருந்தும் என மலைவழித்தடங்களில் 5 புதிய BS VI குறுஞ்சட்ட புறநகர் பேருந்துகளும் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று பொது மக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகள் அடிப்படையில் எடப்பாடியிலிருந்து சங்ககிரி வழியாக திருச்செங்கோடு வழியாக இயக்கப்பட்ட பேருந்து தற்போது ஜலகண்டாபுரத்திலிருந்து சித்திரபாளையம், சமுத்திரம், புதுப்பாளையம் வழியாக கொங்கணாபுரம் வரையிலும், சங்ககிரியிலிருந்து கன்னியாம்பட்டி வரை இயக்கப்பட்ட பேருந்து கன்னியாம்பட்டியலிருந்து புதுப்பாளையம், சமுத்திரம், சித்திரபாளையம் வழியாக ஜலகண்டாபுரம் வரையிலும், ஓமலூரிலிருந்து முத்துநாயக்கன்பட்டி வழியாக சேலம் நகரப்பேருந்து நிலையம் வரை இயக்கப்பட்ட பேருந்து ஓமலூரிலிருந்து சடைமாரியம்மன் கோவில் வழியாக சேலம் நகரப்பேருந்து நிலையம் வரையிலும், ஆத்தூரிலிருந்து திம்மநாயக்கன்பட்டி வழியாக மங்களபுரம் வழியாக இயக்கப்பட்ட பேருந்து ஆத்தூரிலிருந்து அரசநத்தம், ஊராண்டிவளசு, திம்ம நாயக்கன்பட்டி வழியாக மங்களபுரம் வரையிலும், மேச்சேரியிலிருந்து மேட்டூர் வரை வழியாக இயக்கப்பட்ட பேருந்து மேச்சேரியிலிருந்து மல்லிய குந்தம் பிரிவு, ஊஞ்சகரடு, கச்சராயனூர் வழியாக மேச்சேரி வரையிலும் என 5 வழித்தட மாற்றம் செய்யப்பட்ட பேருந்து சேவைகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, ஏற்காட்டிலிருந்து பட்டிபாடி வேலூர் வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது பட்டிபாடி வேலூரிலிருந்து மலை வழித்தடம் வழியாக சொனப்பாடி வரையிலும், சேலம் நகரப் பேருந்து நிலையத்திலிருந்து உயிரியல் பூங்கா, செட்டிச்சாவடி வழியாக டேனிஷ்பேட்டை வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது டேனிஷ் பேட்டையிலிருந்து பெரிய வடகம்பட்டி வரையிலும், மேச்சேரியிலிருந்து மேட்டூர் வரை இயக்கப்பட்ட பேருந்து மேட்டூரிலிருந்து மேச்சேரி வரையிலும், மூலக்காட்டி லிருந்து மேச்சேரி வரை இயக்கப்பட்ட பேருந்து தற்பொழுது மேச்சேரியிலிருந்து மல்லியகுந்தம் பிரிவு, ஊஞ்சக்கரடு, கச்சராயனூர் வழியாக மேச்சேரி வரை என 4 பேருந்து சேவைகள் வழித்தட நீட்டிப்பு செய்யப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, இ.ஆ.ப., மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநர் வெ.குணசேகரன், பொதுமேலாளர் த.மோகன்குமார், முதுநிலை துணை மேலாளர் (மனித வள மேம்பாடு) க.ராஜராஜன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.


### திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்

### வள்ளியூர் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு!

திருநெல்வேலி கிழக்கு மாவட்டம், வள்ளியூர் வடக்கு ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்து வந்த ம.கிரகாம் பெல் அவர்கள், திருநெல்வேலி கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அவருக்குப் பதிலாக **அலெக்ஸ் அப்பாவு**, (14/90-ஏ, மெயின் ரோடு, லெப்பை குடியிருப்பு, காவல் கிணறு & அஞ்சல், இராதாபுரம் தாலுக்கா, திருநெல்வேலி மாவட்டம் - 627 105) அவர்கள் வள்ளியூர் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"** **துரைமுருகன்**
சென்னை- 600 018. பொதுச்செயலாளர்,
நாள்: 11.10.2025. தி.மு.க.



### திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்

### காவல் கிணறு, தனக்கர்குளம் ஆகிய ஊராட்சிகள் மாற்றியமைப்பு

### தலைமைக் கழக அறிவிப்பு!

திருநெல்வேலி கிழக்கு மாவட்டம், வள்ளியூர் தெற்கு ஒன்றியத்தில் உள்ள **"காவல் கிணறு ஊராட்சி"** இனி, வள்ளியூர் வடக்கு ஒன்றியத்திலும்;

வள்ளியூர் வடக்கு ஒன்றியத்தில் உள்ள **"தனக்கர்குளம் ஊராட்சி"** இனி, **வள்ளியூர் தெற்கு ஒன்றியத்திலும்** தொடர்ந்து செயல்படும்.

**"அண்ணா அறிவாலயம்"** **துரைமுருகன்**
சென்னை- 600 018. பொதுச்செயலாளர்,
நாள்: 11.10.2025. தி.மு.க.


### கரூர் துயரச் சம்பவம் குறித்து உயர்நீதிமன்றம் நியமித்த சிறப்பு புலனாய்வுக் குழு விசாரித்து வருவதால்

# சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டிய அவசியமில்லை!

## உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வாதம்!

**புதுடெல்லி, அக். 12-**

**கரூரில் விஜய் பிரச்சாரக் கூட்டத்தில் 41 பேர் உயிரிழந்த துயரச் சம்பவம் தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது, கரூர் துயரச் சம்பவத்தில் சிறப்பு புலனாய்வுக் குழு முழுமையான விசாரணையை நடத்தி வருவதாக, தமிழ்நாடு அரசு சார்பில் வாதிட்ட மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் தெரிவித்தார்.**

விஜய் பிரச்சாரக் கூட்டத்தில் 41 பேர் உயிரிழந்தது மிகவும் கொடூரமானது என்றும், குறிப்பிட்ட இடத்தில் 12 மணிக்கு வருவதாக கூறிவிட்டு விஜய் மிக தாமதமாக வந்ததால் விபத்து நேரிட்டதாக அவர் கூறினார். மேலும், கரூர் துயரச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களையும், உயிரிழந்தவர்களின் உறவினர்களையும் இதுவரை நேரில் சென்று விஜய் பார்க்கவில்லை என்றும் அரசு வழக்கறிஞர் குற்றம்சாட்டினார்.

இந்த துயரம் சம்பவம் குறித்து விசாரிக்க உயர்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரி அஸ்ரா கார்க், முன்னாள் சி.பி.ஐ. அதிகாரி என்பதால் விசாரணை முறையாக நடைபெறும் என்று தமிழ்நாடு அரசு சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் முகுல் ரோத்தகி தெரிவித்தார்.

இதையடுத்து, வழக்கு பிற்பகலுக்கு ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் விசாரணைக்கு வந்தது. இதேபோல், தமிழ்நாடு அரசு சார்பில் ஆஜரான மற்றொரு மூத்த வழக்கறிஞர் அபிஷேக் சிங்வி, உயர்நீதிமன்றம் திறமையான அதிகாரி தலைமையில் சிறப்பு புலனாய்வு குழுவை அமைத்துள்ளது என்றும், எனவே சி.பி.ஐ விசாரணை தேவை இல்லை என்று வாதிட்டார். அனைத்து வழக்குகளையும் சி.பி.ஐ., விசாரணைக்கு அனுப்பக்கூடாது என்றும், அரிய வழக்குகளை மட்டுமே சூழ்நிலைகளுக்கு ஏற்ப பரிந்துரைக்க வேண்டும் என்றும் உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வின் தீர்ப்பு உள்ளதாக சுட்டிக்காட்டினார்.

ஓய்வு பெற்ற நீதிபதி அருணா ஜெகதீசன் தலைமையில் மற்றொரு விசாரணையும் நடைபெற்று வருகிறது என்பதை அவர் சுட்டிக்காட்டினார். இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அனைவரின் வலியையும் தமிழ்நாடு அரசு அறிந்துள்ளது என்றும் அவர் கூறினார். கள நிலவரங்கள் அனைத்தையும் அறிந்தவர்கள் தமிழ்நாடு அரசின் அதிகாரிகள், எனவே ஒரு சிறந்த அதிகாரியின் தலைமையில் அமைக்கப்பட்ட இந்த சிறப்பு விசாரணை குழுவில் கரூர் சம்பவம் தொடர்பான விசாரணை தொடர வேண்டும்.

இவ்வாறு பல வழக்குகளை தொடர்ச்சியாக மாற்றிக் கொண்டிருந்தால் சிபிஐ முன்பு அதிக அளவிலான வழக்குகள் குவிந்து கிடக்கும். ஆனால் சிபிஐக்கு இருப்பதோ குறைந்த அளவிலான அதிகாரிகள்தான் என்று அபிஷேக் சிங்வி தெரிவித்தார்.

மாவட்ட நிர்வாகத்தின் சிறப்பு அனுமதியுடன் உடற்கூறு ஆய்வு இரவில் நடத்தப்பட்டது என்றும் கூறினார். அப்போது, மாவட்ட நிர்வாகத்தின் சிறப்பு அனுமதி மற்றும் உத்தரவின் அடிப்படையில் இரவில் உடற்கூறு ஆய்வு நடைபெறுவது வழக்கம் தான் என்று நீதிபதிகள் தெரிவித்தனர். 220 மருத்துவர்கள் அழைக்கப்பட்டு பல்வேறு மருத்துவமனைகளில் உடற்கூறு ஆய்வுகள் நடத்தப்பட்டது. போலீசார் பெருமளவுக்கு பாதுகாப்புக்கு நியமிக்கப்பிட்டிருந்தனர்.

நடிகர் என்பதால் மக்கள் கூட்டம் குவிந்தது. காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை உணவு, குடிநீர் இல்லாமல் மக்கள் மயங்கி விழுந்துள்ளனர். பேருந்திலிருந்து குடிநீரை வீசி எரிந்துள்ளனர் என்று தமிழ்நாடு அரசின் வழக்கறிஞர் வில்சன் தெரிவித்தார்.

கரூர் சம்பவம் தொடர்பாக சரியான தரவுகள் மற்றும் ஆதாரங்கள் பிரமாண பத்திரமாக தாக்கல் செய்யப்படவுள்ளதாக தமிழ்நாடு அரசு தெரிவித்தது. இதனை ஏற்ற உச்சநீதிமன்றம் வழக்கை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைத்து உத்தரவிட்டது.

# புத்தொழில் நிறுவன வளர்ச்சியில் சமூகநீதி காக்கும் தமிழ்நாடு!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் முதல்வருக்கு பாராட்டு!

சென்னை, அக்.12-

புத்தொழில் நிறுவன வளர்ச்சியில் சமூக நீதியை தமிழ்நாடு நிலைநாட்டி யுள்ளது என முதல்வருக்கு 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்ககம் சார்பில் "உலக புத்தொழில் மாநாடு2025" கோவையில் நடந்து முடிந்துள்ளது. இம்மாநாட்டில், 39 நாடுகளை சேர்ந்த, 264 பிரதிநிதிகள் பங்கேற்றனர். 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வருகை புரிந்தனர்.



தினகரன்
அக்டோபர் 11, 2025 சனிக்கிழமை
தொழில் வளர்ச்சி

விண்வெளி தொழில்நுட்பம், காலநிலை மாற்ற மேலாண்மை, மின் வாகன தொழில்நுட்பம், வேளாண் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட புத்தொழில் நிறுவனங்கள், அரசுத்துறைகள், பெரு நிறுவனங்கள், தொழில் வளர் காப்பகங்கள் என 750 அரங்குகளுடன் புத்தொழில் கண்காட்சியும் நடத்தப்பட்டுள்ளது. இந்த மாநாட்டை, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், நேற்று முன்தினம் துவக்கி வைத்த கையோடு ஒரு புதிய அறிவிப்பையும் வெளியிட்டுள்ளார்.

அதாவது, புத்தொழில் நிறுவனங்களை மேம்படுத்த ரூ.100 கோடியில் இணை உருவாக்க நிதியம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பையும் வெளியிட்டுள்ளார். இது, தங்களது சொந்த முயற்சியால் ஸ்டார்ட்அப் நிறுவனங்களை நடத்தும் இளம் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டினை தொழில் துறையில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் இளைஞர்கள் புதிய தொழில்களை தொடங்கவும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்திற்கு, புத்துயிர் ஊட்டி அதன் செயல்பாடுகளை விரிவுபடுத்தி வருகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

அதன் ஒரு பகுதியாக இந்த உலக புத்தொழில் மாநாடு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 2021ம் ஆண்டு வரை 2,032 ஆக மட்டுமே இருந்தது. இது, கடந்த 4 ஆண்டுகளில் 10,800 ஆக அதிகரித்துள்ளது.

அதாவது, 8,000க்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளன. புத்தொழில் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு அரசு எந்த அளவுக்கு ஊக்கம் அளித்து வருகிறது என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம்தான் மேற்கண்ட புள்ளிவிவரம். இதில் சுமார் 49 சதவீத நிறுவனங்கள் பெண்களால் நடத்தப்படுபவை என்பது குறிப்பிடத்தக்கது.

இதை தான் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கோவையில் நேற்று முன்தினம் பேசும்போது, புத்தொழில் நிறுவன வளர்ச்சியிலும் சமூக நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது என பெருமைப்பட கூறியுள்ளார். அடுத்ததாக, வரும் 2030ம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்திட வேண்டும் என்ற தனது ஆசையை வெளிப்படுத்தி, அதற்கான இலக்கை அடைய தொடர் முயற்சி மேற்கொண்டு வருகிறார். இதன் ஒரு பகுதியாக, சென்னை, மதுரை, ஈரோடு, திருநெல்வேலி, ஒசூர், சேலம், கடலூர், தஞ்சாவூர், கோவை, திருச்சி ஆகிய 10 நகரங்களில் வட்டார புத்தொழில் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

உலகின் முன்னணி ஸ்டார்ட்அப் மையங்களுள் ஒன்றாக தமிழகத்தை நிலைநிறுத்தவும், உலகளாவிய ஸ்டார்ட்அப் நிறுவனங்களை, தமிழக நிறு வனங்களுடன் இணைக்கவும், புதிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தி தரவும், நாட்டிலேயே முதன்முறையாக தமிழகத்தில், அதுவும் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படும் கோவை மாநகரில் உலக புத்தொழில் மாநாடு நடத்தி முடிக்கப்பட்டதற்கு தொழில்முனைவோர் பெரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

உலகின் தலைசிறந்த புத்தொழில் சூழல் கொண்ட முதல் 20 இடங்களில் தமிழ்நாட்டினை கொண்டு வரவேண்டும் என்பதுதான் தமிழ்நாடு அரசின் இலக்கு. அந்த இலக்கை நோக்கிய பயணமாக இந்த புத்தொழில் மாநாடு நடந்து முடிந்துள்ளது.

இவ்வாறு 'தினகரன்' கூறியுள்ளது.




மதுரை மாநகராட்சியில் ஒப்பந்த பணியாளராக பணியாற்றி உயிரிழந்த பணியாளர்களின் குடும்பத்தார்களுக்கு இறப்பு காப்பீடு நிதியாக தலா 5 லட்சத்துக்கான காசோலையினை அன்னாரின் குடும்ப உறுப்பினர்களுக்கு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். உடன் மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன், கழக நிர்வாகிகள் தவமணி, பெ.சசிக்குமார், ஜீன்ஸ் சிவக்குமார், ஜே. கருப்பு, ஜே.மரியா உள்ளிட்ட திரளானோர் பங்கேற்றனர்.



மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை சார்பில் தமிழ்நாடு தொழிலாளர்கள் நல வாரியங்களில் மதுரை பெருமண்டல அளவில் பதிவு பெற்றுள்ள தொழிலாளர்களுக்கு பவ்வேறு நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் (7.10.2025) அன்று பயனாளிகளுக்கு வழங்கினார். தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை அரசு செயலாளர் கொ.வீர ராகவ ராவ், தொழிலாளர் ஆணையர் சி.ராமன் ஆகியோர் உடன் உள்ளனர்.